**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 49/2021**

**PROSECUTION WITNESS NO. 3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சுரேஷ் | **Caste** : | |
| **Father's Name** | : கேசவன் | **Religion** : | **Hindu** |
| **Village** | : ஒத்தைவார்காரத்தெரு, கீழவாசல் | **Calling** : | ஓட்டுநர் |
| **Taluk** | : தஞ்சாவூர் | **Age** : | **53/2023** |

**(Accused 1, 2, 3 Present.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.11.2023**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு** 3, **திருமதி. எம். உதயராணி**, தட்டச்சர்

**<u>C.C.No. 49/2021 29.11.2023</u>** **விசாரணை ஆரம்பிக்கும் நேரம்**: 01.50

**முதல் விசாரணை**:

**1.** நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கார் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மலைய பெருமாள் என்பவரின் காரின் ஓட்டுநராக நான் வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது. (**ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) கடந்த 08.01.2021 ஆம் தேதி அ.சா.1 என்னை அழைத்தார். கார் விபத்து ஏற்பட்டதாகவும், அதுசம்பந்தமாக என்னை அழைப்பதாக கூறினார்.

2. நான் அப்போது அ.சா.1ன் வீட்டிற்கு சென்றேன். அப்போது 3 நபர்கள் நின்றுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் என்னிடம் ஓட்டுநரா என்று கேட்டார்கள். ஆமாம் என்று கூறினேன். செங்கிப்பட்டியில் ஒரு விபத்து ஏற்பட்டதாகவும், அந்த விபத்தை நான் ஏற்படுத்தினேனா என்று கேட்டார்கள். நான் அங்கு செல்லவில்லை என்று கூறினேன். அவர்கள் SP அலுவலகத்தில் இருந்து வருவதாகவும், அசல் ஓட்டுநர் உரிமம் இருக்கிறதா என்று கேட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். பின்னர் மீண்டும் 10.00 மணிக்கு என்னை வரச் சொன்னார்கள்.

3. நான் ஓட்டுநர் உரிமத்தை வைத்துக் கொண்டு அ.சா.1 வீட்டுவாசலில் நின்றுக் கொண்டிருந்தேன். அங்கு வந்தவர்கள் முகமூடி அணிந்திருந்தார்கள்.

**C.C.No. 49/2021 29.11.2023**

அப்போது எனக்கு அடையாளம் தெரியவில்லை. அவர்கள் என்னிடம் தாங்கள் கூப்பிடும்போது வருமாறு கூறினார்கள். நான் காத்துக் கொண்டிருந்தேன். அப்போது அ.சா.1 நெஞ்சுவலி என்று கூறிக் கொண்டு வீட்டிற்கு வெளியே வந்தார். நான் வீட்டிற்கு எதிரே இருந்த மளிகைக்கடையில் இருந்தேன். நான் காரை எடுத்துக் கொண்டு அ.சா.1 யை அழைத்துச் சென்றேன். மீண்டும் வீட்டிற்கு வந்துவிட்டோம்.

4. பின்னர் அன்றையதினம் போலீசார் என்னிடம் கையெழுத்துக் கேட்டார்கள். நான் கையெழுத்து செய்தேன். நான் ஓட்டுநரா என கேட்டு வீட்டில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது. (**கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என் முன்பாக எந்த பொருளும் கைப்பற்றவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது. சாட்சியை கிழக்கு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் 1061 திருமதி. கௌதமி அவர்கள், நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார்.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :

5. கடந்த 16.01.2021 ஆம் தேதி காலை 09.00 மணியளவில் தஞ்சாவூர் தொல்காப்பியர் சதுக்கம் அருகே கிழக்கு காவல்நிலைய போலீசார் வாகன தணிக்கை செய்துக் கொண்டிருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் அந்த வழியாக இருசக்கரவாகனத்தில் வந்த ஒரு நபரை போலீசார் பிடித்து என் முன்பாகவும், வினோத் என்பவர் முன்பாகவும் கைது செய்து விசாரித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அப்போது அந்த நபர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்று சொன்னால் சரியல்ல.

6. அதனடிப்படையில் அந்த நபர் எடுத்து ஆஜர் செய்த தடயப்பொருட்களை போலீசார் மகஜரில் கைப்பற்றினார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும் வினோத் என்பவரும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு

**C.C.No. 49/2021    29.11.2023**

எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**7.** நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.